[திரு. எம்.சி. சம்பத்] *[2017 மார்ச் 20*

ஆட்சியர் அவர்களால் தடை செய்யப்பட்டு, பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இது சூலூர் வட்டாட்சியரால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், காவல் துறை, Director General of Mines Safety *மற்றும் இதர அலுவலர்களின் அறிக்கை வரப்பெற்றவுடன், விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், இந்த விபத்தில் மரணமடைந்த திரு. சக்திவேல் மற்றும் திரு. பாலன் ஆகிய இரண்டு தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்குவது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, மதுரை, வாடிப்பட்டி மற்றும் கொண்டையாம்பட்டி தாலுகாக்களில் உள்ள கல்குவாரிகளில் ஏற்பட்ட விபத்தில் இறந்த மூன்று தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலத் துறையின் மூலமாக ரூ.5 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

4. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)–ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இக்கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக* (Panel of Chairmen) *நியமிக்கிறேன். (குறுக்கீடு) திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், நான் அடுத்த அலுவலுக்குச் சென்று விட்டேன். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை; உட்காருங்கள். பிறகு பேசலாம். உட்காருங்கள்.*

1. *திரு. சு. ரவி*
2. *திரு. பி.எம். நரசிம்மன்*
3. *திரு. வி.வி. இராஜன் செல்லப்பா*
4. *திரு. சு. குணசேகரன்*
5. *திரு. தங்க. தமிழ்ச்செல்வன்*
6. *திரு.* P. *வெற்றிவேல்*

(குறுக்கீடுகள்) இல்லை, பேசாமல் உட்காருங்கள்.